**வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டம்- மேலதிக நிதியளித்தல் - மாகாண ஆக்கக்கூறு 2013 யூலை 01 தொடக்கம் 2013 திசெம்பர் 31 வரை**

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின் - மேலதிக நிதியளித்தல் - மாகாண ஆக்கக்கூறு 2013 யூலை 01 தொடக்கம் 2013 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 19 ஆம் திகதிய 2890 – எஸ்ஆர்ஜ (எஸ்எப்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் (iv) ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

வடக்கு வீதி இணைப்புச் செயற்திட்டத்தின், மேலதிக நிதியளித்தல் - கடன் உடன்படிக்கையின்படி, வட மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் வடமத்திய மாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளதுடன் உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளது. இலங்கையில் வட மாகாணத்திற்குள்ளும் வட பிராந்தியத்திற்கும் தென் பிராந்தியத்திற்கும் இடையிலும் வீதி இணைப்பை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாக உள்ளது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பின்வருமாறு உள்ளன.

**பகுதி பீ புனரமைப்பும் மீளமைப்பும்**

வட மாகாணத்தில் ஏறத்தாழ 50 கிலோ மீற்றர் மாகாண வீதிகளின் புனரமைப்பு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் புனரமைப்பும் மற்றும்/ அல்லது மீளமைப்புச் செய்தல்.

**பகுதி சீ – புனரமைப்பும் மீளமைப்பும்**

வட மத்திய மாகாணத்தில் ஏறத்தாழ 70 கிலோ மீற்றர் மாகாண வீதிகளின் புனரமைப்பு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட பாலங்களின் புனரமைப்பும் மற்றும்/ அல்லது மீளமைப்புச் செய்தல்.

செயற்திட்ட நிர்வாக கைநூலின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 33.67 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ஐ.அ.டொலர் 28.9 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏடிபீ) நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டன. செயற்திட்டத்தின் வரிகள் மற்றும் தீர்வைகளிற்காக இலங்கை அரசாங்கத்தால் ஐ.அ.டொலர் 4.77 மில்லியன் தொகை வழங்கப்பட்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 யூலை 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2017 திசெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின்படி இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும் நியாயமான சமர்ப்பித்தலும் தொடர்பான வடிவமைப்பு, அமுல்ப்படுத்தல் மற்றும் உள்ளகக் கட்டுப்பாடு என்பவற்றை உள்ளடக்குவதுடன் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பிரயோகித்தலும் அச்சந்தர்ப்பத்தில் பொருத்தமான கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரித்தலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில்

செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வின் நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக் கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்று நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**3. அபிப்பிராயம்**

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்காக முறையான கணக்கீட்டுக் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக் கட்டுபாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**4. நிதிக் கூற்றுக்கள்**

**4.1 நிதிசார் செயலாற்றல்**

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2013 யூலை 01 தொடக்கம் 2013 திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 154,104,294 ஆக இருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றது.

| செலவின விடயம் | 2013 யூலை 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதிக்கான செலவினம் |
|---|---|
| | ரூபா. |
| சிவில் வேலைகள் | 152,944,920 |
| செயற்திட்ட முகாமைத்துவக் கிரயம் | 1,159,374 |

------------------
154,104,294
=========

## 4.2 கட்டுநிதி நிதியக் கணக்கு

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 யூலை 01 தொடக்கம் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டுக் காலப்பகுதியில் கட்டுநிதி நிதியக் கணக்கின் தொழிற்பாடுகள் இடம்பெறவில்லை.

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 செப்தெம்பர் 01 ஆந் திகதிய எஸ்ஈசீ/2013/07 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வடமத்திய மாகாண செயற்திட்ட அமுலாக்கல் பிரிவில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 04 உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.10.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 250,000,000 இனை விஞ்சுகின்ற ஒப்பந்த வழங்கல் தொடர்பான தகவல்கள் ஆகக் குறைந்தது பிரபல்யமான ஒரு தேசிய பத்திரிகையிலும் அரசாங்க வர்த்தமானியிலும் கட்டாயமாகப் பிரசுரிக்க வேண்டும். எவ்வாறாயினும், செயற்திட்ட ஒப்பந்தங்களைக் கையளித்தல் தொடர்பாக மேற்கூறப்பட்ட நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.2 நிதியத்தின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு, 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான திரண்ட பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் உள்ளபடியான நிதிகளின் பயன்பாடு என்பவற்றிற்குரிய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் | | 2013 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு | 2013 ஆம் ஆண்டின் போது பயன்படுத்திய நிதிகள் | | 2013 திசெம்பர் 31 வரை திரண்ட நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|---|---|---|---|
| | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில். | ரூபா. மில். | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில். | யூ.எஸ். டொலர் மில். | ரூபா. மில். |
| ஏடிபீ | 28.90 | 3,641.40 | 142 | 1.080 | 136.1 | 1.080 | 136.1 |
| ஜீஓஎஸ்எல் | 4.77 | 601.02 | 8 | 0.063 | 7.9 | 0.063 | 7.9 |
| மொத்தம் | 33.67 | 4,242.42 | 150 | 1.143 | 144.0 | 1.143 | 144.0 |

## 5.3 பௌதீக செயலாற்றல்

(அ) கடன் உடன்படிக்கையின் பிரகாரம் வடமாகாணத்தில் 51.71 கிலோ மீற்றர் நீளமான 07 வீதிகளையும் வடமத்திய மாகாணத்தில் 75.65 கிலோ மீற்றர் நீளமான 07 வீதிகளையும் செயற்திட்டக் காலப்பகுதியின் போது புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. ஒட்டுமொத்த செயற்திட்ட அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தகுதியான ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டு சகல சிவில் வேலைகளும் ஆரம்பிக்கப்படுவதுடன் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக ஆலோசனையாளரும் நியமிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் வடமகாணத்தினால் ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்கோ அல்லது ஆலோசனையாளர்களை நியமிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அளவீட்டுப் பத்திரங்களின் பிரகாரம், புனரமைப்பு செயற்பாடுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் ஆரம்ப மற்றும் இறுதி இடங்களின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்குரிய தகவல்களை உள்ளடக்கி வீதியின் பெயர்ப்பலகை பொருத்தப்பட வேண்டும். 2014 ஆகஸ்ட் 24 ஆந் திகதி வரையிலும் ஐந்து வீதிகளில் அவ்வாறான பெயர்ப்பலகை பொருத்தப்பட்டிருக்காமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) கடன் உடன்படிக்கையின் 5 ஆவது பட்டோலையின் பிரகாரம், செயற்திட்டத்தினால் கடன் செயற்பாட்டுத் திகதி தொடக்கம் 3 மாதங்களுக்குள் கொள்வனவுகளை உள்ளடக்கிய செயற்திட்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்காக இணையதளமொன்று அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் 2014 செப்தெம்பர் வரையிலும் அவ்வாறான இணையதளமொன்று அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை.